9—

இரயில்வே மேம்பாலம்

***4794—திரு. ஆர். மனோகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி சந்திப்பு மற்றும் திருவானைக்காவல் இரயில்வே மேம்பாலங்களை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி சந்திப்பு மற்றும் திருவானைக்காவல் அருகிலுள்ள இரயில்வே மேம்பாலங்களை அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தர் உதித்த இந்தியத் திருநாட்டில், முழுமையான அமைதி நிலவ, நாட்டிலுள்ள அனைத்து நதிகளையும் இணைக்க, மதவெறி மறைந்து மனித நேயம் சிறந்து, கடன்கள் இல்லாத, கலவரம் இல்லாத, ஊழல் ஒழிந்த, ஊழியம் நிறைந்த, ஏழ்மை இல்லாத இந்தியாவை உருவாக்க, கருப்புப் பணத்தை வெளிக்கொண்டுவர, கச்சத்தீவை மீட்டுக்கொண்டுவர, மாநில சுயாட்சி காக்கப்பட, உலக அரங்கில் இந்தியா வலிமைமிக்க வல்லரசாக உருவாக, நாடாளும் தலைவியாக பாராளப்போகும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்னை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். திருச்சி மாநகர இரயில்வே சந்திப்பு மேம்பாலம், மாண்புமிகு அம்மா*

2014 ஜனவரி 31]

அவர்களுடைய ஸ்ரீரங்கம் தொகுதியில் திருவானைக்காவல் இரயில்வே மேம்பாலம் ஆகியவற்றின் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பணிகள் மிக முக்கியமான பணிகளாகும். திருச்சி மாநகர மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான இரயில்வே மேம்பாலப் பணிகள் விரைவுபடுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது அந்தப் பணிகள் எந்த நிலையில் உள்ளன, எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி இரயில்வே சந்திப்பு அருகே உள்ளே வலுவிழந்த இருவழித்தட குறுகலான மேம்பாலத்தில் போக்குவரத்தை அனுமதித்து அதன் அருகிலேயே மூன்று வழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணியினை முதற்கட்டமாகவும், கட்டி முடிக்கப்பட்டபின் தற்போதைய பழைய மேம்பாலத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அவ்விடத்தில் இரண்டாம் கட்டமாக மூன்று வழிச்சாலை மேம்பாலம் கட்டும் பணியை மொத்தம் 81.40 கோடி ரூபாய் செலவில் இரயில்வே துறையுடன் கூட்டாகச் செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்ட மேம்பாலப் பணிகளுக்கு 18-12-2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அது ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது. இறுதி செய்யப்பட்ட பின் பணிகள் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். அதேபோல திருவானைக்காவல் அருகே கிலோ மீட்டர் 16/10-ல் உள்ள பழமையான, குறுகலான இருவழித்தட இரயில்வே மேம்பாலத்திற்கு மாற்றாக, நான்கு வழித்தட புதிய மேம்பாலம் ரூபாய் 47.30 கோடி செலவில் போக்குவரத்தை முற்றிலும் நிறுத்தாவண்ணம் பாலத்தை இரண்டு கட்டமாக கட்டுவதற்கு 20-1-2014 அன்று முதற்கட்டமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அது ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன், பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள்.

திரு. ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்ட மக்கள் திருச்சி மாநகருக்கு வரவேண்டுமென்று சொன்னால், இந்த இரயில்வே மேம்பாலத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள். இப்பாலத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பது திருச்சி மாநகர மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. அதேபோல, திருச்சியிலிருந்து சென்னை செல்கின்ற மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் உள்ள திருவானைக்காவல் மேம்பாலமும் முக்கியமானதாகும். இவை அகலப்படுத்தப்படும் என்றும், அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்றும் அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்த இரண்டு பணிகளையும் முடிக்க நிதி ஒதுக்கீடு செய்த தமிழகத்தினுடைய காவல் தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் அனைத்து மக்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கின்ற வகையில் சிறப்பான மக்களாட்சி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வளம், அமைதி, வளர்ச்சி என்று புரட்சிகரமான திட்டத்தைக் கொடுத்து, இந்திய ஆட்சியை அலங்கரிக்கக்கூடிய நல்ல வேளையில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருமங்கலம் நகரத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை முதல் பழைய விமான நிலையம் வரை செல்லக்கூடிய சாலையின் நடுவே இருக்கக்கூடிய Railway Gate-ஐக் கடப்பதற்கு பல சிரமங்கள் ஏற்படுகின்றன. நகரத்திற்கும், நகரத்தைச் சுற்றியுள்ள 25, 30 கிராமங்களுக்கும் இது மிகப்பெரிய கஷ்டமாக இருக்கின்ற காரணத்தால், திருமங்கலம் நகரத்தின் மையத்தில் அமைந்திருக்கக்கூடிய Railway Gate அருகில் உயர்மட்ட மேம்பாலம் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

2014 ஜனவரி 31]

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டவேண்டுமென்று சொன்னால், ஒரு இலட்சம் போக்குவரத்து அலகுகளுக்கு மேல் இருந்தால்தான், அந்தப் பகுதியிலே மேம்பாலம் கட்ட முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியில் வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, அதிலே ஒரு இலட்சம் போக்குவரத்து அலகுகளுக்கு மேல் இருப்பின், பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

கணினிமயமாக்குதல்

***2075—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளையும் கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகளைக் கணினிமூலம் கண்காணிக்க வேண்டிய அவசியம் கருதி முழுமையான கணினிமயமாக்கல் அதாவது End to End Computerisation *திட்டத்தினைக் கொண்டு வருவதற்காக*